THE SAVERA
OUR BUSINESS IS YOU

# சவேரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்


**பதிவு அலவலகம் : 146, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர், சென்னை - 600 004.**
**CIN No.: L55101TN1969PLC005768 இணையதளம் : www.saverahotel.com**
**தொலைபேசி : 91-44-2811 4700; ஃபேக்ஸ் : 91-44-28113475; இ-மெயில் : hotsave@md2.vsnl.net.in**


## பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

(1) நிறுவன பங்குதாரர்களுக்கான 49வது வருடாந்திர பொதுப் பேரவைக் கூட்டம் (AGM) வியாழக்கிழமை 20 செப்டம்பர், 2018 அன்று மாலை 3.00 மணிக்கு தி மியூசிக் அகாடமி, எண்.168, டி.டி.கே. சாலை, சென்னை-600 014-ல் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

(2) வருடாந்திர பொதுக் கூட்டத்தின் வியாபார பரிவர்த்தனை குறித்த அறிவிப்புடன், 2017-18 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கை உறுப்பினர்களின் பதிவு செய்த முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இது நிறுவனத்தின் இணையதளமான **www.saverahotel.com**-லும் கிடைக்கப்பெறும்.

(3) மேலும், வருடாந்திர பொதுப் பேரவைக் கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையுடன் மின்னணு மூலம் உறுப்பினர்களுக்கு அவர்களது பதிவு செய்யப்பட்ட இ-மெயில் முகவரிக்கு அனுப்பபட்டுள்ளது. ஏதேனும் அத்தகைய உறுப்பினர்கள் ஆண்டு அறிக்கையை காகித வடிவில் பெற விரும்பி, நிறுவனத்திற்கு எழுத்து மூலம் தெரிவித்தால் இலவசமாக தரப்படும். ஆண்டு அறிக்கை பெறாத ஏதேனும் உறுப்பினர்கள், நிறுவன செயலருக்கு பதிவு அலுவலக விலாசத்திற்கு கோரிக்கை அனுப்பி அறிக்கையை பெற்று கொள்ளலாம் மற்றும் மேலும் அவர்கள் வருடாந்திர பொதுப் பேரவைக் கூட்டத்தில் நேரடியாகவோ அல்லது பதிலியை நியமித்து பங்கு பெறலாம்.

(4) கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர் தனக்குப் பதிலாக ஒரு பதிலியை நியமித்து அவர்கள் கலந்து கொண்டு வாக்களிக்க உரிமை உண்டு. பதிலி கம்பெனியின் உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. பதிலி படிவங்கள் தகுதியுடனும் மற்றும் பயனுள்ளதாக இருக்கும் வகையில் நிரப்பப்பட்டு முத்திரையிட்டு & கையெழுத்திடப்பட்டு, கூட்டம் துவங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

(5) கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 91 மற்றும் நிறுவனங்களின் விதி 10 (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) திருத்தியமைக்கப்பட்ட விதிகள் 2014 மற்றும் SEBI-யின் விதி 42 (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்), விதிகள் 2015-ன் படி, தகுதியுள்ள உறுப்பினர்களின் சமபங்குகளுக்கான 2017-18 நிதியாண்டிற்கான இறுதி ஈவுத்தொகையை ஆராய்ந்து அளிப்பதற்காகவும், 49வது வருடாந்திர பொதுப்பேரவைக் கூட்டத்திற்காகவும் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் 14 செப்டம்பர், 2018 முதல் 20 செப்டம்பர், 2018 வரை (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும்.

(6) SEBI-யின் விதி 44 (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்), விதிகள் 2015 மற்றும் நிறுவனங்களின் சட்டம் 2013-ன் பிரிவு 108, உடன் வாசிக்க வேண்டிய நிறுவனச் சட்டங்களின் விதிகள் 2014 திருத்தியமைக்கப்பட்ட விதி 20-ன் படி (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) மின்னணு வாக்கு அளிக்கும் வசதியை நிறுவனம் உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளது. உறுப்பினர்களுக்கு தொலைதூர மின்னணு வாக்கு அளிக்கும் வசதியை அளிப்பதற்காக (வருடாந்திர பொதுப் பேரவைக் கூட்டம் (AGM) நடைபெறும் இடம் தவிர மற்றொரு இடத்திலிருந்து மின்னணு மூலம் வாக்களிக்கும் முறை) M/s.சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீஸஸ் (இந்தியா) லிமிடெட்-ஐ நிறுவனம் நியமித்துள்ளது. அந்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

(i) தொலைதூர மின்னணு வாக்களிக்க தகுதியுள்ள மின்னணு-வாக்காளர் உறுப்பினர்களை மதிப்பீடு செய்வதற்கான கெடுத்தேதியாக 13 செப்டம்பர், 2018 என நிறுவனம் முடிவு செய்துள்ளது.

(ii) ஏதேனும் நபர்கள், அறிக்கை அனுப்பிய பின்னர் ஆனால் கெடுத்தேதி அன்று பங்குகளை பெற்று உறுப்பினர்கள் ஆகியிருந்தால் அவர்கள் பதிவாளர்களான M/s.கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் அவர்களுக்கு தங்களது ஃபோலியோ எண்./DP ID மற்றும் Client ID ஆகியவற்றை கோரிக்கை மூலம் எழுதி அனுப்பி தங்களது பயனர் ID மற்றும் கடவுச்சொல்லை (password) பெற்றுக்கொள்ளலாம்.

(iii) தொலைதூர மின்னணு வாக்களிக்கும் காலம் 16 செப்டம்பர், 2018 (காலை 9.00 மணிக்கு) அன்று துவங்கி 19 செப்டம்பர், 2018 (மாலை 5.00 மணிக்கு) அன்று முடிவடையும். இக்காலகட்டத்தில் உறுப்பினர்கள் தங்களுடைய வாக்குகளை தொலைதூர மின்னணு மூலம் வாக்களிக்கலாம். அதன் பின் மின்னணு வாக்கு ஊடகம் செயலற்றதாக ஆக்கப்படும்.

(iv) ஏற்கனவே தொலைதூர மின்னணு மூலம் வாக்களிக்காத உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளை ஆண்டு பொது கூட்டத்தில் பங்கு கொண்டு அங்கு வைக்கப்பட்டுள்ள வாக்கு சீட்டு மூலம் வாக்களிக்கலாம்.

(v) மின்னணு வாக்குப் பதிவு மூலம் முன்பே வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திரப் பொதுப்பேரவைக் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க முடியாது. இருப்பினும், உறுப்பினர் மின்னணு மூலமாகவும் மற்றும் வாக்குச்சீட்டு மூலமாகவும் வாக்களித்திருப்பின் வாக்குச்சீட்டு மூலமாக அளித்த வாக்கு புறக்கணிக்கப்படும்.

(vi) ஏதேனும் தொலைதூர மின்னணு வாக்கு குறித்த கேள்விகள் மற்றும் குறைகள் இருப்பின், உறுப்பினர்கள் அடிக்கடி கேட்கும் கேள்விகளுக்கு ("FAQ") மற்றும் மின்னணு-வாக்கு கையேடு ஆகியவற்றுக்கு **www.evotingindia.com-ல்** உதவி பிரிவின் கீழ் அல்லது இ-மெயிலில் எழுத்து மூலமாக **helpdesk.evoting@cdslindia.com-**க்கு அல்லது கட்டணமில்லா தொலைபேசி எண்.**1800-200-5533-ல்** தொடர்பு கொள்ளலாம்.

(vii) ஆன்ட்ராய்டு அடிப்படை மொபைலில் இருந்து பங்குதாரர்கள் தங்களது வாக்குகளை CDSL' மொபைல் app m-voting மூலம் வாக்களிக்கலாம். m-voting app-ஐ கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஆப்பிள் மற்றும் விண்டோஸ் போன் உபயோகிப்பாளர்கள் தங்களுக்கான app ஸ்டோர் மற்றும் விண்டோஸ் ஸ்டோரிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். உங்களது மொபைலில் உள்ள மொபைல் app-ல் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை தயவுசெய்து பின்பற்றுமாறு கேட்டுகொள்ளப்படுகிறது.

(7) நிறுவனத்தின் வருடாந்திரப் பொதுப்பேரவைக் கூட்ட தீர்மானத்தின் முடிவுகள் நிறுவனத்தின் ஆண்டு பொதுக்கூட்ட முடிவிலிருந்து 48 மணி நேரத்திற்குள் அறிவிக்கப்படும். அறிவிக்கப்பட்ட முடிவுகள் ஆய்வாளர் அறிக்கையுடன் நிறுவனத்தின் இணையதளமான **www.saverahotel.com-**லும் மற்றும் CDSL இணையதளமான **www.evotingindia.com--**லும் உறுப்பினர்கள் தகவல்களுக்கு மேலும் பங்கு சந்தைக்கும் தெரிவிக்கப்படும்.

**சவேரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்-காக**

இடம் : சென்னை
தேதி : 30.08.2018

**N S மோகன்**
கம்பெனி செயலாளர்

**21 Cms x 12 Cms**